# முதலீட்டாளர்கள் போட்டி போட்டுக் கொண்டு என்னைச் சந்திக்க உள்ளார்கள்!

## சென்னை விமான நிலையத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டி! ... முதல் பக்கத் தொடர்ச்சி

இந்த முதலீடுகள் எல்லாம் தமிழ்நாட்டை 2030-க்குள் ஒரு ட்ரில்லியன் டாலர் பொருளாதாரமாக மாற்றும் நம்முடைய இலக்கை விரைவாக அடைய உதவும். இதற்காக உலகின் கவனத்தை தமிழ்நாட்டை நோக்கி ஈர்க்க அமெரிக்காவின்சான்ஃபிரான்சிஸ்கோ-சிகாகோ மாநகரங்களுக்கு நான் செல்கிறேன். ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும் விவரங்களைத் திரும்பி வரும்போது உங்களுக்கு நான் நிச்சயம் தெரிவிப்பேன். அமெரிக்க வாழ் தமிழர்களைச் சந்திக்க இருக்கிறேன். உங்கள் எல்லோருடைய வாழ்த்துகளோடும் இந்தப் பயணம் நிச்சயமாக வெற்றிகரமானதாக அமையும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**செய்தியாளர்** : மத்திய அரசு "சமக்ரா சிக்ஷா" திட்டத்தின் மூலமாக தமிழக அரசுக்கு ஒதுக்க வேண்டிய 573 கோடி ரூபாய் இன்றைக்கு ஒதுக்கவில்லை. புதிய கல்விக் கொள்கை ஏற்றுக் கொள்ளாததால் இந்த நிலை என்று சொல்லியிருக்கிறார்கள். இதை மாநில அரசு எப்படி இந்த விஷயத்தை எதிர்கொள்ளயிருக்கிறீர்கள்?

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** தேசிய கல்விக் கொள்கையை ஏற்றுக்கொள்ளாத காரணத்தினால் தமிழ்நாட்டிற்கு வரவேண்டிய நீங்கள் கேட்டதுபோல 573 கோடி ரூபாயை ஒன்றிய அரசு நிறுத்தி வைத்திருக்கிறது. இந்தச் செய்தி வெளியாகியிருக்கிறது. பள்ளிக் கல்வித் துறையில் தமிழ்நாட்டிற்கான நிதியை உடனடியாக ஒன்றிய அரசு விடுவிக்க வேண்டும். இதுதொடர்பாக ஏற்கனவே கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லாம் நாடாளுமன்றத்திலும் பேசியிருக்கிறார்கள்; சம்பந்தப்பட்ட அமைச்சர்களைச் சந்தித்து நேரடியாகவும் சொல்லியிருக்கிறார்கள். நானும் இன்றைக்குக் கடிதம் எழுதியிருக்கிறேன். தொடர்ந்து வலியுறுத்துவோம்.

**செய்தியாளர்:** அமெரிக்கா சென்று வந்த பிறகு அமைச்சரவையில் ஏதாவது மாற்றம் இருக்குமா?

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** மாறுதல் ஒன்றுதான் மாறாதது. Wait and see.

**செய்தியாளர்** : அமைச்சர் துரைமுருகன், ரஜினிகாந்த் விவகாரம் குறித்து நீங்கள் என்ன சார் சொல்கிறீர்கள்?

**முதல்வர் மு.க. ஸ்டாலின்** : அவர்கள் இரண்டுபேரும் நீண்டகால நண்பர்கள். அவரும் சொல்லிவிட்டார். இவரும் சொல்லிவிட்டார். அதை நீங்கள் அவர் சொன்னதுபோல, நகைச்சுவையாக எடுத்துக்கொள்ள வேண்டுமே தவிர, நீங்கள் பகைச்சுவையாக எடுத்துக் கொள்ளக்கூடாது. அதைத்தான் அவர் சொன்னதுபோல நான் திருப்பிச் சொல்கிறேன்.

**செய்தியாளர்** : இந்த அமெரிக்கப் பயணத்தில் குறிப்பிட்ட இலக்கை முதலீடுகளாக நிர்ணயித்து இந்தப் பயணம் மேற்கொள்கிறீர்களா? 43 ஆண்டுகளுக்கு பிறகு முன்னாள் முதலமைச்சர் சிகாகோ மாநாட்டில் தமிழர்களைச் சந்தித்துப் பேசினார். 43 ஆண்டுகளுக்கு பிறகு நீங்களும் தமிழர்களை சந்தித்துப் பேச இருக்கிறீர்கள். அது எத்தகைய மகிழ்ச்சியை உங்களுக்குத் தருகிறது?

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** போகின்ற காரியம் நிச்சயமாக வெற்றியடையும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. முதலீட்டாளர் களை பொறுத்தவரை போட்டிப்போட்டுக் கொண்டு என்னைச் சந்திக்கவேண்டும், தமிழ்நாட்டிற்கு நாங்கள் இதைச் செய்யவேண்டும், அதைச் செய்யவேண்டும் என்று நேரம் கேட்டிருக்கிறார்கள். இப்போது நான் கொடுத்திருக்கின்ற நாட்களே போதாது என்று கருதுகிறேன். அந்த அளவுக்குப் போட்டிப்போட்டுக் கொண்டு ஆர்வத்துடன் இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் இன்றைக்கு தொழில் முதலீட்டில் முதலிடத்தில் இருக்கிறது. அதைத் தமிழ்நாட்டில் இருப்பவர்கள் சொல்கிறார்களோ இல்லையோ, வெளிநாட்டில் இருப்பவர்கள் சொல்கிறார்கள். நிச்சயமாக நீங்கள் நினைப்பதுபோல நடக்கும்.

போகின்ற காரியம் நிச்சயமாக வெற்றி பெறும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. முதலீட்டை ஈர்ப்பதற்காக மகிழ்ச்சியோடு செல்கிறேன். உறுதியோடு செல்கிறேன்.

**நாணய வெளியீட்டு விழா மரியாதை அடிப்படையில் நடந்தது!**

**செய்தியாளர்** : மத்திய அரசுடன் திடீர் என்று இணக்கமான உறவை கடைப் பிடிப்பீர்களா? ஒன்றிய அமைச்சர்கள் முத்தமிழறிஞர் கலைஞர் நாணய வெளியீட்டு விழாவிற்கு வந்தது தொடர்பாக.

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** என்ன இணக்கமான நிலை. அது உங்களுடைய எண்ணம். நாணய வெளியிடுவது ஒன்றிய அரசின் பொறுப்பு. அவர்களின் அனுமதியோடுதான் வெளியிடப்படுகிறது. அதனால் அந்த மரியாதை அடிப்படையில், அந்த முறைப்படி அவர்களை அழைத்தோம். வந்தார்கள். நாணயத்தை வெளியிட்டுச் சென்றார்கள்.

**செய்தியாளர்** : ஏற்கனவே மூன்று முறை வெளிநாட்டுப் பயணங்கள் மேற்கொண்டு முதலீடுகள் ஈற்றது தொடர்பாக...

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** என்னென்ன முதலீடுகளை ஈர்த்திருக்கிறோம் என்பதைச் சொல்லியிருக்கிறோம். எத்தனை பேருக்கு வேலை கொடுக்கப் போகிறோம் என்பதையும் சொல்லியிருக்கிறோம். அதேபோல என்னென்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதையும் சொல்லியிருக்கிறோம். என்னென்ன பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதைத் தெளிவாக உங்களிடம் சொல்லியிருக்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

> **"நமது திராவிட மாடல் அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, இந்த மூன்றாண்டு காலத்தில் இதுவரை 872 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி இருக்கிறது. இதன் மொத்த மதிப்பு 9 இலட்சத்து 99 ஆயிரத்து 93 கோடி ரூபாய். இதன் மூலமாக, 18 இலட்சத்து 89 ஆயிரத்து 234 நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். இதில் 234 திட்டங்கள் உற்பத்தியை தொடங்கி விட்டார்கள். 4 இலட்சத்து 16 ஆயிரத்து 717 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைத்துவிட்டது. மற்ற ஒப்பந்தங்களும் படிப்படியாக அடுத்து செயல்பாட்டுக்கு வரும்."**

---

### நாடாளுமன்றத் தேர்தலில் 40 இடங்களை வென்றதுபோல

# 2026 தேர்தலில் 200 இடங்களில் வெற்றி பெறுவோம்!

### சிவகங்கை மாவட்டக் கழகக் கூட்டத்தில் அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் பேச்சு!



சிவகங்கை, ஆக. 29 -

சிவகங்கை மாவட்ட கழக செயற்குழுக் கூட்டம் காரைக்குடியில் உள்ள தலைவர் கலைஞர் பவள விழா மாளிகையில் பசும் பொன் தா.கிருட்டிணன் அரங்கில் மாவட்ட அவைத் தலைவர் வழக்கறிஞர் அ.கணேசன் தலைமையில் முன்னாள் அமைச்சர் மு. தென்னவன் முன்னிலையில் நடைபெற்றது.

கூட்டத்தில் மாவட்ட கழகத் துணைச் செயலாளர் த.சேங்கை மாறன் வரவேற்றுப் பேசினார்.

இந்த கூட்டத்தில் திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு பேசினார்.

கூட்டத்தில் கலந்து கொண்டு சிவகங்கை மாவட்ட கழக செயலாளர் கூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் பேசியதாவது:-

தற்போது வாக்காளர் பட்டியல் திருத்தப்பணிகள் நடைபெற்று வருகிறது.

புதிதாக வாக்காளர் சேர்த்தல், நீக்கல் உட்பட அப்பணியில் ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், ஊராட்சி கழக செயலாளர்கள் வாக்குச்சாவடி முகவர்கள் சிறப்பாக செய்ய வேண்டும். நடைபெற்று முடிந்த பாராளுமன்ற தேர்தலில் 40 இடங்களிலும் வெற்றி பெறுவோம் என்று கழக தலைவர் முதல்வர் தளபதி அவர்கள் கூறினார். அதை உறுதியுடன் கூறினார் .

அதற்கான தேர்தல் பணியை கடந்த ஓராண்டுகளுக்கு மேலாக வகுத்துக் கொடுத்தார். அதன்படி நாம் பணியாற்றியதால் 40 இடங்களில் வெற்றி பெற முடிந்தது. இந்தியாவில் தமிழகத்தில் போட்டியிட்ட அனைத்து தொகுதிகளிலும் வெற்றி பெற்ற ஒரே இயக்கம் நமது கூட்டணி தான்.

இந்த வெற்றியை இந்திய நாடே திரும்பி பார்த்தது. முறையாக தேர்தல் பணியினை செய்தால் நாம் வெற்றி பெறுவோம் என்பது இதன்மூலம் உறுதியாகிறது. எனவே வருகிற 2026 சட்டமன்றத் தேர்தலில் 200 இடங்களில் நாம் வெற்றி பெறவேண்டும் என்று முதல்வர் தெரிவித்து உள்ளார். அதை முதல்வரின் கட்டளையாக ஏற்று தேர்தல் பணியினை இப்பொழுதே மேற்கொள்ள வேண்டும். அதற்கான தேர்தல் வியூகங்களை முதல்வர் அவர்கள் நமக்கு வகுத்து தருவார். முதல்வர் தளபதி அவர்கள் கூறிய ஆலோசனையினால்தான் இந்தியா கூட்டணி அமைந்தது.

கடந்த 10 ஆண்டுகளாக சர்வாதிகார ஆட்சி நடத்திய மோடி ஆட்சிக்கு நடைபெற்று முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் கடிவாளம் போடப்பட்டுள்ளது . பிரதமர் மோடி விரும்புவது போல் ஒன்றியத்தில் செயல்பட முடியவில்லை. இதற்கு காரணம் இண்டியா கூட்டணி வலிமையான எதிர்க் கட்சியாக உள்ளது. தற்பொழுது இந்தியா கூட்டணி வெற்றி பெற்றதன் மூலம் பிரதமர் மோடியால் தன்னிச்சையாக சர்வாதிகாரமாக செயல்பட முடியவில்லை. பாராளுமன்றத்தில் அவர்கள் நினைக்கும் தீர்மானங்களை எளிதாக நிறைவேற்ற முடியவில்லை தமிழகம் தொடர்ந்து பா.ஜ.க. ஆட்சியில் வஞ்சிக்கப்பட்டு வருகிறது.

இதை நமது கழகத்தினர் பொதுமக்களிடம் எடுத்து கூற வேண்டும். கழகத்தலைவர் - முதல்வர் உத்தரவின் பேரில் பொது உறுப்பினர் கூட்டம் வருகிற 29ஆம் தேதி முதல் 3ம் தேதி வரை ஒன்றிய, பேருர், நகர கழகங்களின் சார்பில் நான்கு தொகுதியில் நடைபெற உள்ளது. இதில் அனைத்து ஒன்றிய, நகர, பேரூர் கழக மற்றும் கழக உறுப்பினர்கள் அதிக அளவில் பங்கேற்கும் வகையில் செய்திட வேண்டும்.

இந்த பொது உறுப்பினர் கூட்டம் நடத்துவதை பார்த்து எதிர்கட்சிகள் இப்பொழுதே கழகம் சட்டமன்ற தேர்தல் பணிகளை துவங்கிவிட்டார்கள் என்று நினைத்திடும் அளவிற்கு இந்த கூட்டம் அமைய வேண்டும். கழகத் தலைவர் முதல்வர் தளபதி அவர்கள் நமது கூட்டணி பற்றி சிந்தித்து அதற்கான முடிவினை எடுப்பார்.

நமது திராவிட மாடல் ஆட்சியில் கடந்த மூன்றரை ஆண்டுகள் பல்வேறு சாதனைகளை செய்துள்ளோம். இதனால் குடும்பத்திற்கு ஒருவர் பயன் அடைந்துள்ளனர். இதை மக்களிடம் எடுத்து கூறினாலே நாம் எளிதில் வெற்றி பெறுவோம். கழக தொண்டர்களுடன் கலந்து பேசி மன மாச்சர்யங்களை களைந்து ஒற்றுமையுடன் தேர்தல் பணியாற்றினால் வெற்றி பெற முடியும். சிவகங்கை மாவட்டத்தில் நான்கு சட்டமன்ற தொகுதியிலும் நாம் வெற்றி பெற உறுதி ஏற்க வேண்டும்.

மாவட்ட கழக துணைச் செயலாளராக பணியாற்றிய கே.எஸ்.எம்.மணிமுத்து மறைவு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும். கடந்த 21 ஆண்டுகளாக அயராது கட்சி பணியாற்றினார். கட்சிப்பணியுடன் சமூதாயப் பணியும் ஆற்றி வந்தார். அவரது இழப்பு வெற்றிடமாக உள்ளது. அந்த வெற்றிடத்தை நிரப்புவது என்பது மிகவும் கடினமாகும்.

அவரை பிரிந்து துயரத்தில். வாடும் அவரது குடும்பத்தினருக்கு கழக தலைவர் முதல்வர் தளபதி சார்பிலும் மாவட்ட கழகத்தின் சார்பிலும் ஆறுதலை தெரிவித்துக் கொள்கிறேன். மணிமுத்து குடும்பத்தினருக்கு என்றும் உறுதுணையாக இருப்போம். வருகிற 6,8 தேதிகளில் கழக துணை பொதுச் செயலாளர் கனிமொழி எம்.பி. நமது மாவட்டத்திற்கு வருகை தர உள்ளார். இதேபோல் வருகிற 10ம்தேதி கழக இளைஞரணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சுற்றுப் பயணம் செய்கிறார். இந்த நிகழ்ச்சியில் அதிக அளவில் கழகத்தினர் பங்கேற்றிட வேண்டும். அவர்களை சிறப்பான முறையில் வரவேற்றிட வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் பேசினார்.

காரைக்குடி நகர்கழக செயலாளரும், துணைமேயரு. மான என்.குணசேகரன் நன்றி கூறினார் .

செயற்குழு கூட்டத்தில் தலைமை செயற்குழு உறுப்பினரும், மேயருமான எஸ். முத்துதுரை, முன்னாள் எம்.எல்.ஏக்கள் சுப.மதியரசன், எஸ்.மாரியப்பன்கென்னடி, பொதுக்குழு உறுப்பினர்கள் பள்ளத்தூர் கே. எஸ்.ரவி, எம்.சோமசுந்தரம், த.உதய குமார், ஏ.ஆர்.ஜெயமூர்த்தி, திருமதி ஆதி. கண்ணாத்தாள், நகர் கழகச் செயலாளர்கள் சி.எம்.துரை. ஆனந்த், க.பொன்னுச்சாமி, ஒன்றிய கழக செயலாளர்கள் சுப. சின்னத்துரை, நாகனி ரவி, லெ.மு.ரவிச்சந்திரன், பூபால சிங்கம், ஆர்.எம். கென்னடி, யோக. கிருஷ்ணகுமார், எம். அண்ணா துரை, துரை. ராஜாமணி, வே.தமிழ் மாறன், ஆறு.செல்வராஜன், எம்.ஏ. கடம்பசாமி, கே. பாலசுப்பிரமணியன், பூமணி, எஸ்.சண்முகவடிவேல், விராமதி மாணிக்கம், நா. நெடுஞ்செழியன் குன்னக்குடி சுப்ரமணியன், எம். ஜெயராமன், சுப.சின்னத் துரை, திருமலைமுத்து ராம லிங்கம்,

பேருர்கழக செயலாளர்கள் ஜெயராமன், கதிர்வேல், அசோக், பிரம்மையா, ஆர். கார்த்திகேயன், பேரூராட்சி மன்ற தலைவர்கள் ராதிகா, கே.பி.எஸ்.பழனியப்பன், மாவட்ட இளைஞரணி அணிப்பாளர் நாகனி செந்தில் குமார், துணை அமைப்பாளர்கள் எஸ்.எம்.மதிவாணன், கார்த்தி, கே.எம். பொற்கோ, மகாதீர், பரணி கிட்டு, மாவட்ட மகளிரணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன், மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் ஹேமலதாசெந்தில், நிர்வாகிகள் மார்கரெட்கமலா, பாக்ய லட்சுமி விஜயகுமார், காஞ்சனா, தமிழ் பிரியா,

மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.எஸ். நாராயணன், மாவட்ட ஆதிதிராவிடர் குழு தலைவர் கொத்தமங்கலம் சேது, அமைப்பாளர் சிங்கமுத்து, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி .ராஜ்குமார் வர்த்தக அணி ருக்மா சரவணன், மாவட்ட இலக்கிய அணி தலைவர் புலிக்குத்திசீனிவாசன், அமைப்பாளர் சிவ. முத்துவளவன், மானாமதுரை ஒன்றிய குழு துணை தலைவர் முத்துச்சாமி, மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் சசி வர்ணம்,

துணைஅமைப்பாளர் பாலசுப்பிரமணியன், கண்ணன், மாவட்ட வழக்கறிஞரணி அமைப்பாளர் பாஸ்கரன், துஷாந்த்பிரதீப். குமார், மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் எஸ்.எஸ்.ஏ.வல்லபாய், துணை அமைப்பாளர் மு. குமணன், அயலக அணி சன் சீமான் சுப்பையா, தலைவர்கள் பி.ஏ.நஜ்மூதீன், திருமதி ராதிகா, துணைத் தலைவர் இப்ராகிம், ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் சொ.கண்ணன், அண்ணாமலை, சேவியர், சன்சுப்பையா, இளைஞரணி மோகன்ராஜ், கணேசன், மாரிக்கண்ணன்,ஓட்டுனர் ரமேஷ், உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

---

### க.மும்மூர்த்தி - வி.ஜி.பிரபாகரன் - பா.ஜீவா தலைமையில்

# விழுப்புரம் தொகுதி பொது உறுப்பினர்கள் கூட்டம்!

### இரா.லெட்சுமணன் எம்.எல்.ஏ. - ம.ஜெயச்சந்திரன் - தயா.இளந்திரையன் பங்கேற்பு!

விழுப்புரம், ஆக. 29-

விழுப்புரம் சட்டமன்ற தொகுதி, கண்டமங்கலம் மேற்கு ஒன்றியம், கோலியனூர் மேற்கு ஒன்றியம் மற்றும் வளவனூர் பேரூரில் பொது உறுப்பினர்கள் கூட்டம் ஒன்றியச் செயலாளர்கள் க.மும்மூர்த்தி, வி.ஜி.பிரபாகரன், பேரூர் செயலாளர் பா.ஜீவா ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா.இலட்சுமணன், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட துணை செயலாளர் தயா.இளந்திரையன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

ஒன்றிய குழு பெருந் தலைவர்கள் ஆர்.எஸ். வாசன், சச்சிதானந்தம், பொதுக்குழு உறுப்பினர் டி.என்.ஜெ.சம்பத், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் சுவை. சுரேஷ், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ப.அன்பரசு, ஒன்றிய நிர்வாகிகள்

மாவட்ட பிரதிநிதிகள் கண்டமங்கலம் மேற்கு ஒன்றிய நிர்வாகிகள் அர. அசோக்குமார், இராமகிருஷ்ணன் , கே.டி.ஜி.சரபோஜி, சரவணன், முருகன், ராஜேந்திரன், ஒன்றிய துணைச் செயலாளர்கள் சுந்தரமூர்த்தி, ராஜசேகர், பூங்குன்றம், பொருளாளர் முரளிதரன், இளைஞர் அணி அமைப்பாளர் ஏழுமலை, மாவட்ட சுற்றுச்சூழல் துணை அமைப்பாளர் விஜய் சங்கர், மாவட்ட நெசவாளர் அணி கனகராஜ், மாவட்ட மகளிர் தொண்டர் அணி ராஜேஸ்வரி,

கோலியனூர் மேற்கு ஒன்றிய நிர்வாகிகள் பொருளாளர் காமராஜ் ,

மாவட்ட பிரதிநிதிகள் ஆறு.சங்கர், ஆவின் தண்டபாணி, கிருஷ்ணமூர்த்தி, துணைச் செயலாளர்கள் பட்டு ஆறுமுகம், ஞானவேல்

ஜெயா பன்னீர்செல்வம், துணைத் தலைவர் உதயகுமார், மாவட்ட அணி நிர்வாகிகள் வழக்கறிஞர் ரா.சதீஷ் , அசோக் சதாசிவம், சுயல் ரமேஷ், பூக்கடை சுந்தர், கே.என்.பி ராஜா, ஆலாத்துர் செல்வம், சுப்பிரமணி, மு.தயாளன், வளவனூர் பேரூர் நிர்வாகிகள் மாவட்ட பிரதிநிதிகள் அ.கோ. ராஜன், ஜி.பழனி, பொருளாளர் ரகுமான், துணைச் செயலாளர்கள் விஜயா பெரியசாமி, கந்தசாமி, இளைஞர் அணி கலைவாணன் உள்ளிட்ட உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளைக் கழக, வார்டு கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

---

# குன்றாண்டார்கோவில் ஒன்றியக் கூட்டம்!

புதுக்கோட்டை, ஆக. 29 –

புதுக்கோட்டை வடக்கு மாவட்டம், கந்தர்வக்கோட்டை சட்டமன்றத் தொகுதி, குன்றாண்டார் கோவில் கிழக்கு, மேற்கு, மத்திய ஒன்றிய கழகம் மற்றும் கீரனூர் பேரூர் கழகத்தின் சார்பாக நடைபெற்ற பொது உறுப்பினர்கள் ஆலோசனை கூட்டத்தில் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் சிறப்புரையாற்றினார். ஒன்றிய கழக செயலாளர்கள் என்.சேட்டு ஓ.எஸ்.வெங்கடாசலம், சி.சண்முகம், பேரூர் கழக செயலாளர் வழக்கறிஞர் ப.அண்ணாதுரை ஆகியோர் வரவேற்புரையில் நடைபெற்ற இந்த கூட்டத்திற்கு, கழக இலக்கிய அணி துணைத்தலைவர் கவிச்சுடர் கவிதைப்பித்தன், மாவட்ட அமைத்தலைவர் அரு. வீரமணி, மாவட்ட கழக பொருளாளர் துணை மேயர் எம்.லியாகத் அலி, மாவட்ட கழக துணைச் செயலாளர் எஸ்.எஸ் கருப்பையா, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் டாக்டர். செ.குறிஞ்சிவாணன், மாவட்ட கவுன்சிலர் த.செல்வம், பேரூராட்சி தலைவர் கே.எம்.கே.ரவிக்குமார், துணைத்தலைவர் எம்.ஏ.எம். இம்தியாஸ், ஜெ.அசரப் அலி, கீரை.ராஜேந்திரசோழன் உள்பட கழகத் தோழர்கள் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.



வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம், களிமங்கலம் ஊராட்சியில் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் திட்ட முகாமை தொடங்கி வைத்து பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். மாவட்ட ஆட்சித் தலைவர் மா.சௌ.சங்கீதா, மாவட்ட ஊராட்சி தலைவர் சூரிய கலா கலாநிதி, கிழக்கு ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் ரா.மணிமேகலை, மேலூர் வருவாய் கோட்டாட்சியர் ஜெயந்தி, ஊராட்சி மன்ற தலைவர் ஹமீது பாத்திமா ஹக்கீம், பொன்னுசாமி, வழக்கறிஞர் அணி கலாநிதி, இளைஞர் அணி இளங்கோ உட்பட பலர் உடன் உள்ளனர்.